

சின்னாளபட்டி சிறப்புநிலை பேரூராட்சிக்கு உட்பட்ட 2வது வார்டு செக்காபட்டியில் ரூ.28லட்சம் மதிப்பில் கட்டப்பட்ட சுகாதார வளாகத்துடன் கூடிய குளியலறையை ஊரக வளர்ச்சித்துறை அமைச்சர் ஐ.பெரியசாமி அவர்கள் ரிப்பன் வெட்டி திறந்து வைத்தார். அருகில் ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குநர் பெ.திலகவதி, பேரூராட்சிகளின் உதவி இயக்குநர் ராஜா, ஒன்றிய செயலாளர் முருகேசன் பேரூராட்சி மன்றத்தலைவர் பிரதீபாகனகராஜ், செயல் அலுவலர் இளவரசி, துணைத்தலைவர் ஆனந்திபாரதிராஜா உட்பட பலர் உள்ளனர்.



தூத்துக்குடி ஆதிபராசக்தி நகரில் தேங்கியிருக்கும் வெள்ளநீரை வெளியேற்ற ஏதுவாக Hitachi மற்றும் JCB இயந்திரங்களின் மூலம் எட்டயபுரம் சாலை பகுதியில் வழித்தடம் ஏற்படுத்தி, வெள்ளநீர் வெளியேற்றும் பணியை சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத்துறை அமைச்சரும் தூத்துக்குடி வடக்கு மாவட்ட திமுக செயலாளருமான திருமதி. கீதாஜீவன் 'பார்வையிட்டார்.உடன் நெடுஞ்சாலைத்துறை கோட்ட பொறியாளர் ஆறுமுக நயினார் மற்றும் உதவி பொறியாளர் உள்ளிட்ட அலுவலர்கள் மற்றும் மாநகர திமுக செயலாளர் ஆனந்தசேகரன், பகுதி செயலாளர் ஜெயக்குமார், மாவட்ட பிரதிநிதி செல்வகுமார், மாவட்ட தகவல் தொழில்நுட்ப அணி ஒருங்கிணைப்பாளர் அபிராமிநாதன், மாநகர சுற்றுச்சூழல் அணி துணை அமைப்பாளர் பொன்னுச்சாமி உள்ளிட்ட கழக நிர்வாகிகள் உடன் உள்ளனர்.



விருதுநகர் மாவட்டம், அருப்புக்கோட்டை தேவாங்கர் கலைக்கல்லூரியில் மாவட்ட நிர்வாகம் மற்றும் விருதுநகர் மாவட்ட வேலைவாய்ப்பு மற்றும் தொழில்நெறி வழிகாட்டும் மையம் இணைந்து நடத்திய மாபெரும் தனியார்துறை வேலைவாய்ப்பு முகாமில் மாவட்ட ஆட்சித்தலைவர் முனைவர் வீ.ப.ஜெயசீலன், தலைமையில், வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத்துறை அமைச்சர் கே.கே.எஸ்.எஸ்.ஆர்.ராமச்சந்திரன் தேர்வு செய்யப்பட்ட நபர்களுக்கு பணி நியமண ஆணையினை வழங்கினார். உடன் சுந்தரலட்சுமி சிவப்பிரகாசம், ஏ.கே.மணி, தலைமைச் செயற்குழு உறுப்பினர் சாகுல் ஹமீது, கே.வி.கே.பிரபாகரன், பாலகணேஷன், பொன்ராஜ், பழனிச்சாமி, பாபுஜி, பாலச்சந்தர் ஆகியோர்கள் இருந்தனர்.



முதுகுளத்தூர் சட்டமன்றம் முதுகுளத்தூர் கிழக்கு ஒன்றியத்திற்கு உட்பட்ட முத்து விஜயபுரம் கிராமம் சமுதாய கூடத்தில் வைத்து முதுகுளத்தூர் கிழக்கு ஒன்றிய கழகம் சார்பாக கலந்தாய்வு மற்றும் அறிமுக கூட்டம் பால்வளத்துறை மற்றும் கதர் கிராம தொழில்கள் வாரியத்துறை அமைச்சர் ஆர்.எஸ்.ராஜகண்ணப்பன், இராமநாதபுரம் மாவட்ட கழக செயலாளர் காதர்பாட்ஷா முத்துராமலிங்கம். எம்.எல்.ஏ. ஆலோசனைப்படி பூபதி மணி ஏற்பாட்டில் வேல்முருகன் முன்னிலையில் இராமநாதபுரம் சத்தியேந்திரன், சத்தியேந்திரன் ஜலாலுதீன், சம்பத்குமார், ரஞ்சித் மணிகண்டன், முருகன், மற்றும் கிளைக் கழகச் செயலாளர்கள் கலந்து கொண்டனர்.



தென்காசி மாவட்டம் சங்கரன்கோவில் முப்புடாதி அம்மன் கோவில் முன்பு அகில இந்திய மக்கள் மறுமலர்ச்சி கழகம் சார்பில் தியாகி இம்மானுவேல் சேகரனாரின் பிறந்த நாளை அரசு விழாவாக அறிவித்த கழகத் தலைவர் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களுக்கு நன்றி தெரிவிக்கும் பொதுக்கூட்டம் அகில இந்திய மக்கள் மறுமலர்ச்சி கழக நிறுவனர் மற்றும் தலைவர் திருச்சி பொன்.முருகேசன் தலைமையில் நடைபெற்றது. இந்நிகழ்வில் பள்ளிக்கல்வித்துறை அமைச்சர் அன்பில் மகேஷ் பொய்யாமொழி பங்கேற்று சிறப்புரையாற்றினார்.உடன் தமிழக அரசின் டெல்லி சிறப்பு பிரதிநிதி ஏ. கே.எஸ்விஜயன்,தமிழக வாழ்வுரிமைக் கட்சி தலைவர் டி.வேல்முருகன் எம். எல்.ஏ.தென்காசி வடக்கு மாவட்டக் கழகச் செயலாளர் ஈ.ராஜா எம்.எல்.ஏ., அ.இ.ம.ம.கழக மாநில செய்தி தொடர்பாளர் வடிவேல்,தென்காசி ஒருங்கிணைந்த மாவட்ட செயலாளர் கருப்பசாமி பாண்டியன் உள்பட பலர் உள்ளனர்.நிகழ்வில் அமைச்சர் அன்பில் மகேஷ் பொய்யாமொழி தியாகி இம்மானுவேல் சேகரனார் அவர்களின் திருவுருவப் படத்திற்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார்.


# ஆழ்ந்த இரங்கல்





புதுக்கோட்டை
தி.மு.க மாநகர செயலாளர்

## ஆ.செந்தில்

அவர்கள்

நேற்று (23.12.2024 – திங்கட்கிழமை) இயற்கை எய்தினார். அன்னாரை இழந்து வாடும் குடும்பத்தினருக்கும், உறவினர்களுக்கும் ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக்கொள்கிறோம்.

...ஆழ்ந்த வருத்தத்துடன்...

மாண்புமிகு. **எஸ்.ரகுபதி** B.Sc.,B.L., சட்டத்துறை அமைச்சர்
மாவட்ட கழகச் செயலாளர்

**புதுக்கோட்டை தெற்கு மாவட்ட தி.மு.க**